செ.வெ.எண்: 649 நாள்: 07.11.2020

# புதுக்கோட்டை அர்பன் மெகா பட்டாசு கடையின் தீபாவளி விற்பனையினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் துவக்கி வைத்தார்.

---

புதுக்கோட்டை நகராட்சி, சின்னப்பா பூங்கா அருகில் அர்பன் மெகா பட்டாசு கடையின் தீபாவளி விற்பனையினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் இன்று (07.11.2020) துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி,இ.ஆ.ப, அவர்கள் தலைமையில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. பின்னர் இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது.

தீபாவளி திருநாளை முன்னிட்டு கூட்டுறவுத்துறையின் அர்பன் கூட்டுறவு பண்டக சாலையின் சார்பில் மெகா பட்டாசு கடை திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு அர்பன் பண்டகசாலை மற்றும் சின்னப்பா பூங்கா அருகில் உள்ள மெகா பட்டாசு கடையின் மூலம் ரூ.70 லட்சத்திற்கு பட்டாசுகள் விற்பனை செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் பட்டாசுகள் வாங்குவதற்கு வரும் பொழுது கொரோனா பரவலை தடுக்கும் வகையில் முகக்கவசம் அணிந்து வர அறிவுறுத்தப்பட்டுள்ளது, மேலும் சமூக இடைவெளியை பின்பற்றவும், கைகளை கழுவுதற்கும், சானிடைசர் போன்றவைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த பட்டாசுக் கடை காலை 9 மணி முதல் இரவு 10 மணி வரை செயல்படும்.

எனவே பொது மக்கள் அர்பன் பட்டாசு கடைகளில் தரமான பட்டாசுகளை வாங்கி தீபாவளி பண்டிகையை பாதுகாப்பான தீபாவளியாக கொண்டாட வேண்டும். மேலும் அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் பா.ஆறுமுகம், மாவட்ட ஊராட்சிக் குழுத்தலைவர் த.ஜெயலெட்சுமி, மாவட்ட வருவாய் அலுவலர் பெ.வே.சரவணன், கூட்டுறவுத்துறை இணைப்பதிவாளர் எம்.உமாமகேஸ்வரி, துணைப் பதிவாளர்கள் ராமைய்யா, அண்ணாத்துரை உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**